

தனி பிரதி
ரூ.10/-





PORIYIYAL KADHIR

# பொறியியல் கதிர்

கதிர் 44 | பாரிப்பு 2 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | அக்டோபர் 2013


## காந்தி ஜெயந்தி நல்வாழ்த்துக்கள்





நூற்றாண்டு விழா சங்கம்

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD

நூற்றாண்டு
2010

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை – 5.

அரசு ஆணை எண்.Ms.822 நாள்: 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது.



# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீவிஜய வருடம் ஐப்பசித் திங்கள் 1-ம் தேதி (18.10.2013) வெள்ளிக்கிழமை பௌர்ணமி திதியும், ரேவதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று காலை 9.00 மணிக்குமேல் 10.15 மணிக்குள் விருச்சிக லக்கன சுபவேளையில்

மதுரை, செல்லூர் தெய்வத்திரு.M.நந்தி-N.நாகம்மாள் அவர்களின் மகன்வழிப் பேரனும்,
அம்மையநாயக்கனூர் தெய்வத்திரு.T.P.சுப்பையா ஆசிரியர்-S.வீரம்மாள் ஆசிரியை அவர்களின்
மகள்வமி பேரனும், எங்களது தவப்புதல்வனுமான திருவளர்ச்செல்வன்

**R. நந்தகோபால்,** B.E., M.B.A.,


(Director, Nandhi Institute of Technology, Madura

மதுரை, சின்ன உடைப்பு, தெய்வத்திரு.V.பம்பையன்-P.பாப்பாத்தி அவர்களின் மகன்வழிப் பேத்தியும்,
தெய்வத்திரு.வெள்ளையன்-மூக்கம்மாள் அவர்களின் மகள்வழிப் பேத்தியும், சின்ன உடைப்பு
திரு.P.பெரியசாமி-P.பூங்கொடி அவர்களின் தவப்புதல்வியுமான திருவளர்ச்செல்வி

**P. செந்தியபிரபா,** B.E., M.Tech.,

(Kalasalingam University)

இவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயித்த வண்ணம், மதுரை, தமுக்கம், **T.S. ராஜம் மஹாலில் (லட்சுமி சுந்தரம் ஹால்)** நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



**தங்கள் அன்புள்ள,**
**Er. S. லீலாவதி,** B.E.,
உதவிச் செயற்பொறியாளர், பொ.ப.து.,
மைய மண்டலச் செயலாளர், TNEA,
165, பாரதி உலா ரோடு,
PWD Er. குடியிருப்பு, மதுரை-2.
Cell: 98656 44542.

## மதுரையில் நடைபெற்ற பொறியாளர் தின நிகழ்வுகள்






**பொதுச் செயலாளர் மடல்**

மடல் – 2(2013-2014)

## தொடரும்
## நம் பயணம்......



### அன்பார்ந்த பொறியாளர் சகோதரர்களே! வணக்கம்!

அக்டோபர் 2. கத்தியின்றி, ரத்தமின்றி நமது தேசத்திற்கு சுதந்திரம் பெற்று தந்த மகாத்மா காந்தி அண்ணல் அவர்களின் பிறந்த நாள். ஆயுதங்களின் வலிமையை விட அஹிம்சையின் வலிமை பெரிது என உலகுக்கு உணர்த்திய மகான். தேசத்தின் நலனுக்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணித்த செம்மல். காந்தி ஜெயந்தி நன்நாளில் தேச நலனில் அக்கறை, வன்முறை அற்ற சமுதாயம், நன்மை செய்ய முடியாவிட்டாலும் யாருக்கும் தீமை செய்யாத குணம் கொள்ள உறுதி பூணுவோம்.

சுமார் 300க்கும் மேற்பட்ட இளநிலைப் பொறியாளர்களின் பதவி உயர்வுக்கு தடையாக இருந்த இரண்டு வழக்குகளும் முடிவுக்கு வந்துள்ளது. மேலும் இளநிலைப் பொறியாளர்களின் பணிவரன்முறை (Regularisation) சம்பந்தமாக முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களால் அரசிடம் கேட்கப்பட்ட தெளிவுரைக்கு அரசு பதில் அளித்துள்ளது.

எனவே இளநிலைப் பொறியாளர்களின் பணிவரன்முறை சம்பந்தமான பணிகள் நடைபெற்று வருகிறது. பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய இளநிலைப் பொறியாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் சிறிது காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இன்னும் சுமார் 10 நாட்களுக்குள் மேற்கண்ட இளநிலைப் பொறியாளர்கள் பணிவரன்முறை செய்யப்படுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

உதவிச் செயற்பொறியாளர் (சிவில்) பதவி உயர்வு காலிப் பணியிட மதிப்பீடு (Estimate of Vacancy) முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களால் அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் அனுப்பப்படும் என்று தெரிய வருகிறது. எண்ணிக்கை 158லிருந்து 175க்குள் இருக்க வாய்ப்பிருக்கிறது.

உதவிச் செயற்பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வு காலிப் பணியிட மதிப்பீடு அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பாரத பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் மத்திய அரசு ஊழியர்களுக்கு ஏழாவது சம்பள கமிஷன் அமைக்க உத்தரவிட்டுள்ளார். 01.01.2016 முதல் ஊதிய உயர்வு அளிக்கும் வண்ணம் இந்த சம்பள கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசு ஊழியர் சங்கங்கள் 01.01.2011 முதல் ஊதிய உயர்வு அளிக்கும் வண்ணம் ஊதிய கமிஷன் பரிந்துரைகள் அமைய வேண்டும் என்று கோரிக்கைகள் வைத்துள்ளனர்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்**

பொதுச்செயலாளர்

**D. முருகேசன்,** பொதுச் செயலாளர்
செல்பேசி எண் 9444 999 588, 9281 309 688
E.mail: d.murugavelsivan@gmail.com

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்.482 பொதுப்பணி(எப்1)த்துறை நாள் 30.09.2013)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | S. அர்ச்சுனன் | கண்காணிப்புப் பொறியாளர் (மின்) |
| 2. | M. பிருத்திவி | செயற்பொறியாளர் |
| 3. | R. பாலசுப்பிரமணியன் | உதவிச் செயற்பொறியாளர் |
| 4. | R.K. சோமகாந்தன் | உதவிச் செயற்பொறியாளர் |
| 5. | A. முத்தையன் | உதவிச் செயற்பொறியாளர் |
| 6. | P. பாலசுப்ரமணியன் | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 7. | A. பாலசுப்ரமணியன் | உதவி இயக்குநர் (புவி பௌதீகவியல்) |

(ஆளுநரின் ஆணைப்படி)

**எம். சாய்குமார்**
அரசுச் செயலாளர்

## இளநிலைப் பொறியாளர்களை பணிவரன்முறை செய்ய தடையாக இருந்த இன்னொரு வழக்கின் தீர்ப்பு

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**

**DATED : 27.08.2013**

CORAM

THE HONOURABLE MR.JUSTICE S.NAGAMUTHU

O.A. No.1552/2003

W.P. No.17351 of 2007

Association of Engineers
Tamil Nadu Public Works Department,
(Recognised in G.O.No.1701 dated 20.10.1986),
Chepakkam, Chennai - 600 005.
Rep. By its General Secretary
Er. G.Krishnan . . . Petitioner

Vs

1. The Tamil Nadu Public Service Commission,
Govt., Estate, Chennai.
Rep. By its Secretary.

2. The Government of Tamil Nadu
Rep. By its Secretary,
Public Works Department,
Fort St. George, Chennai - 9.

3. The Engineer-in-Chief/WRO &
Chief Engineer (General)
Public Works Department,
Chepakkam, Chennai - 5.

4. Diploma Engineers Association
Tamil Nadu Madurai Reg.No.52/79
PWD Campus, Tallakulam, Madurai-2.
Rep. By State President,
C.Ganapathy.

5. Tamil Nadu Engineering Association
Rep. By General Secretary,
Chepauk, Chennai-5.

(R.5 impleaded as per order dated 15.07.2013
in M.P.No.1/09 in W.P.17351/07);

6. D.Murugesan

(R.6 impleaded as per order dated 27.08.2013
in M.P.No.1/13 in W.P.17351/07) . . . Respondents

Writ Petition filed under Article 226 of the Constitution of India praying for the issuance of a writ of Certiorarified Mandamus calling for the records relating to the impugned order of the second respondent dated 31.03.2003 in Lr.No.13262/B2/2002-7 and the order of the third respondent herein dated 09.04.2003 issued in his proceedings No.S2(2)/68710/2000 in violation of R-8 of TNESS Schedule-II sub clause (iii) of TNESS and G.O.R.T.No.2227 P.W. Dated 23.10.1977 and quash the same and direct the respondents herein to observe and expedite the recruitment of Assistant Engineers through TNPSC for which the process of selection has already ser in motion based on 3:1 ratio, pursuant to the notification dated 15.09.2001 in advertisement No.016 duly published in the New Indian Express by the first respondent herein for the appointment of 369 vacacies of A.E., (Civil) PWD in the Tamil Nadu Engineering Service and ensure implementation of 3:1 ratio as provided in G.O.Rt.2227 PWD dated 23.10.1977 in future.

| | | |
|---|---|---|
| For Petitioner | : | Mr.M.Sekar |
| For R.1 | : | No Appearance |
| For RR2&3 | : | Mr.R.Rajeswaran, Spl.G.P., |
| For R.4 | : | Mr.Muthumani Doraisamy |
| For R.5 | : | Mr.S.Namasivayam |
| For R.6 | : | Mrs.Malarvizhi Udayakumar |

**O R D E R**

This writ petition has been filed by an Association known as "Association of Engineers Tamil Nadu Public Works Department". The members of the Association are all graduate engineers from Assistant Engineers to Chief Engineers and they are governed by the Tamil Nadu Engineering Service, Rules.

2. Challenging the proceedings of the Government (the second respondent in Lr.No.13262/B2/2002-7) dated 31.03.2002 and the consequential proceeding of the third respondent in No.S2(2)/68710/2000 dated 09.04.2003, the petitioner Association has filed an Original Application in O.A.No.1552 of 2003 before the Tamil Nadu Administrative Tribunal. On the abolition of the said Tribunal, the said Original Application was transferred to this Court and renumbered as W.P.No.17351 of 2007. That is how, the said writ petition is before me for disposal.

3. By order dated 31.03.2002, referred to above, the Government directed the third respondent ot take steps to promote Overseers and Technical Assistants to the post of Junior Engineers and Assistant Engineers by following the ratio 3:1 between the Engineering Graduates and the Diploma Holders. By letter dated 09.04.2003, the third respondent had promoted the Technical Assistants mentioned therein to the post of Junior Engineers (Civil). It is the grievance of the petitioner Association that the selection of Assistant Engineers to the post of Junior Engineers should be made through the Tamil Nadu Public Service Commission by following the ratio of 3:1.

4. When this writ petition was taken up for hearing, this Court raised a doubt as to how in the service matter, a writ petition could be maintained by an Association.

5. The learned counsel for the petitioner would submit that the writ petition has been filed to protect the interest of the Graduate Engineers who are already working in the Department as well as the Engineering Graduates who aspire for appointment in the Department.

6. In my considered opinion, if any Graduate Engineer who is already working in the Department feels that by means of the impugned orders, his promotion chance has been deprived off, it is for the individual to approach this Court and to work out his remedy. Similarly, if any Engineering Graduate who is not already in service wants to get appointment in the Department, in the event, he has got any grievance that by means of the impugned orders, his chance of getting appointment in the Department is deprived off, it is for the individual to approach this Court by way of writ petition. In a service matter, like a Public Interest Litigation, an Association cannot maintain a writ petition since, the grievance is that of the individuals. In such view of the matter, I am not inclined to go into the other grounds raised in the writ petition and I am inclined to dismiss the writ petition as not maintainable.

7. In the results, the writ petition stands dismissed as not maintainable. No costs.

Sd/-
Asst. Registrar.

/ true copy /

Sd/-
Sub Asst. Registrar.

---

## தவறான புள்ளி விவரங்கள்

2000 ஆம் ஆண்டு மற்றும் 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் சுமார் 500-க்கும் மேற்பட்ட உதவிப் பொறியாளர்கள் தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990-ன் படி உதவிப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளார்கள் என்று தவறான பரப்புரை செய்யப்படுவதாக தெரிய வருகிறது. ஆனால் தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து கீழ்க்கண்ட எண்ணிக்கையில் மட்டுமே உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 2006 ஆம் ஆண்டு | - | 74 + 21 | = 95 |
| 2008 ஆம் ஆண்டு | - | | = 29 |
| மொத்தம் | | | = 124 |

தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்கள் விவரம்.

| | | | |
|---|---|---|---|
| 2006-07 | - | 569 | |
| 2007-08 | - | 244 | |
| 2009-10 | - | 212 | |
| **மொத்தம்** | **-** | **1025** | |
| 2012-13 | - | 152 | (Under Notification) |
| **மொத்தம்** | **-** | **1177** | |

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**

(Special Original Jurisdiction)

Monday, the Twenty Sixth day of August Two Thousand Thirteen

PRESENT

THE HON'BLE MR.JUSTICE D.HARIPARANTHAMAN

MP.No.2 of 2013 in WP.No.23703 of 2013

K.KAMALDEEN (PETITIONERS)
AND 419 OTHERS

Vs

1. THE PRINCIPAL SECRETARY TO (RESPONDENTS)
GOVERNMENT, FINANCE (PAY CELL) DEPARTMENT,
SECRETARIAT, CHENNAI-9.

2. THE ENGINEER IN CHIEF PWD
BUILDINGS, CHIEF ENGINEER BUILDINGS, CHENNAI
REGION AND CHIEF ENGINEER GENERAL, PWD
CHEPAUK, CHENNAI-5.

3. THE COMMISSIONER OF
TREASURIES AND ACCOUNTS, CHENNAI-15.

Petition praying that in the circumstances stated therein and in the affidavit filed there with the High Court will be pleased to stay the proceedings related to impugned order dated 22.07.2013 in G.O.Ms.No.242, Finance (Pay Cell) issued by the respondent pending WP.No.23703 of 2013.

Order : This petition coming on for orders upon perusing the petition and the affidavit filed in support thereof and upon hearing the arguments of MR.YASODVARDHAN SENIOR COUNSEL for M/S.S.NAMASIVAYAM, Advocate for the petitioner the court made the following order:-

The learned Advocate General has stated that there will be no reduction in pay pursuant to the G.O.Ms.No.242 Finance (Pay Cell) Department dated 22.07.2013 for the month of August 2013. Learned Advocate General also submitted that the Government is filing counter today and the matter may be taken up at the earliest and may be disposed before next month.

2. The submission of the learned Advocate General is recorded that there connot be reduction of pay to the employees covered by G.O.Ms.No.242 Finance (Pay Cell) Department dated 22.07.2013 for the month of August, 2013 and the payment which they received up to July 2013 could be paid for August 2013 also.

3. Post this matter along with batch of Writ Petition relating to G.O.Ms.No.242 on 05.09.2013.

-Sd/-
22/08/2013

/ TRUE COPY /

Sd/-
Sub Asst. Registrar (Statistics/C.S.)
High Court, Madras - 600 104.

Finance (PC) Department,
Fort St. George,
Chennai – 600 009.

**Letter No.46373/Pay Cell / 13-2, dated: 23-9-2013.**

From
Thiru K. SHANMUGAM, I.A.S.,
Principal Secretary to Government.

Sir,

Sub: W.P.Nos.21525, 22423 of 2013 and batch cases – Filed challenging the orders issued in G.O.Ms.No.242, Finance (PC) department, dated: 22.7.2013 based on the recommendations of the Pay Grievance Redressal Cell - Instructions issued – Regarding.

Ref: 1. G.O.Ms.No.71, Finance (PC) Department, dated: 26.2.2011.
2. G.O.Ms.No.242, Finance (PC) department, dated: 22.7.2013.
3. Government Letter No.46373 / Pay Cell /13-1, Finance Department, dated: 26.8.2013.
4. From the Government Pleader, High Court of Madras, letter No. – Nil -- dated: 20.9.2013.

-----

I am to invite your attention to the references cited.

2) The Government Pleader, High Court of Chennai in his letter cited has informed that the W.P.Nos.21525, 22423 of 2013 and batch cases filed challenging the orders issued in the reference second cited came up for hearing on 20.9.13. Upon hearing the submissions made by the learned Advocate General, the Hon'ble High Court was also pleased to pass interim order that there should not be any reduction in pay pursuant to the above said Government Orders for the month of September, 2013 with a direction to post all the Writ Petitions along with the Writ Appeals pending before the First Bench.

3) In view of the orders passed by the Hon'ble High Court dated: 20.9.2013 in W.P.Nos.21525, 22423 of 2013 and batch cases, I am to inform that there shall be no reduction in the pay of the employees for the month of September, 2013 pursuant to the orders issued in the Government Order second cited. The Pay and Accounts Officers, Treasury Officers and Sub-Treasury Officers are directed to admit the pay bills of the employees for the month of September , 2013 without any reduction in pay as per the above directions of the Hon'ble High Court.

Yours faithfully,
Sd/-
for Principal Secretary to Government.

# 22.09.2013 அன்று வேலூரில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 22.09.2013 அன்று காலை 10.30 மணிக்கு வேலூரில் மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் தன்னுடைய உரையில் மையச் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார். இளநிலைப் பொறியாளர்/ உதவிப் பொறியாளர் பணிவரன்முறை, பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உயர்வு கொடுப்பது, அடுத்த உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு, 2006 ஆம் ஆண்டு ஊட்டுப் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களை அடுத்த உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் சேர்ப்பது, திருமால் வழக்கு, அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி உதவிப் பொறியாளர்களை வைத்து ஒரு சிறப்புக் கூட்டம் நடத்துவது, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலைப் பொறியாளர்களை தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நூற்றாண்டு விழா உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து பேசினார்.

விதித்திருத்தப் பிரதிநிதி பொறியாளர் என்.கணேசபிரகாஷ் அவர்கள் விதித்திருத்தம் குறித்து விரிவாக பேசினார்.

கோவிலம்பாக்கத்தில் உள்ள சங்கத்திற்கு சொந்தமான இடம் குறித்து பேசப்பட்டது.

மையச் சங்க பொறுப்பாளர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள்.

நூற்றாண்டு விழா மலர் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. மையச் சங்க பொறுப்பாளர்கள், மண்டலச் செயலாளர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

**முடிவுகள் :**

1. உச்சநீதி மன்றத்தில் அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990 சம்பந்தமாக உள்ள வழக்கில் தமிழ்நாடு பொறியியல் சங்கம் பிரதிவாதியாக ஏற்கனவே இணைந்துள்ளது. அந்த வழக்கில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக உள்ள வழக்கறிஞரை மாற்றிவிட்டு புது வழக்கறிஞரை நியமிப்பது என தீர்மானிக்கப்பட்டது.
2. நூற்றாண்டு விழா மலரில் வெளியிட வாழ்த்துச் செய்திகளை பெற கடைசி தேதி 31.10.2013 என நிர்ணயித்து தீர்மானிக்கப்பட்டது.

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2013/நாள் 28.09.2013ன் படி 30.09.2013 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவிப் பெயர் |
|---|---|---|
| 1. | R. சுப்ரமணியன் | உதவிப் பொறியாளர் (மின்) |
| 2. | S. கிருஷ்ணமூர்த்தி | உதவிப் பொறியாளர் |

பெறுதல்

| | |
|---|---|
| அரசுச் செயலாளர், | முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), |
| பொதுப்பணித்துறை, | தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம் |
| புனித ஜார்ஜ் கோட்டை, | மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., |
| சென்னை - 600 009. | சேப்பாக்கம், சென்னை - 5. |

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - இளநிலைப் பொறியாளர்கள் பணிவரன்முறை (Regularisation) - தொடர்பாக.

பார்வை: 1. நீதிமன்ற வழக்கு எண்.WP.No.23630 of 2004 தீர்ப்பு நாள் 22.04.2013.
2. நீதிமன்ற வழக்கு எண்.OA.No.1556/2003, WP.No.17351 of 2007 தீர்ப்பு நாள் 27.08.2013.

பார்வையில் கண்டுள்ள இரண்டு வழக்குகள் முடிவுக்கு வராததால் சுமார் 300-க்கும் மேற்பட்ட இளநிலைப் பொறியாளர்கள் பணிவரன்முறை (Regularisation) செய்யப்படாமல் இருந்தார்கள். மேற்கண்ட இரண்டு வழக்குகளிலும் முறையே 22.04.2013, 27.08.2013 ஆகிய தேதிகளில் மேற்கண்ட இளநிலைப் பொறியாளர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே உடனடியாக அனைத்து இளநிலைப் பொறியாளர்களையும் பணிவரன்முறை செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

இணைப்பு: பார்வை 1 மற்றும் 2 தீர்ப்பு நகல்.

---

பெறுதல்

முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - மின்னியல் உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிச் செயற்பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வு காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of Vacancy) அரசுக்கு அனுப்ப வேண்டுதல் - தொடர்பாக.

பொதுப்பணித்துறையில் காலியாக உள்ள மின்னியல் உதவிச் செயற்பொறியாளர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது. மேலும் பொதுப்பணித்துறையில் பணியாற்றும் மின்னியல் உதவிப் பொறியாளர்/இளநிலைப் பொறியாளர்கள் சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிவு அலுவலர் பதவியில் பணிபுரிந்து வருகிறார்கள்.

மேலும் மேற்கண்ட மின்னியல் உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்களில் பெரும்பாலானோர் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுடன் பணி ஓய்வு பெற இருக்கிறார்கள். எனவே மின்னியல் உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க காலிப்பணியிட மதிப்பீடு அரசுக்கு அனுப்ப வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

நகல்: செயலாளர், பொதுப்பணித்துறை, சென்னை-9.

# 02.10.2013 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 02.10.2013 அன்று காலை 10.30 மணிக்கு சென்னையில் பொறியாளர் சி.ப.சண்முகம் அரங்கில் மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

இந்த கூட்டம் இளநிலைப் பொறியாளர்களின் ஊதிய உயர்வுக்கு சட்ட ரீதியாக ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா? என்று விரிவாக விவாதிப்பதற்காக நடத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் தன்னுடைய உரையில் மையச் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார். தற்போது உள்ள சூழ்நிலையில் இளநிலைப் பொறியாளர்களின் ஊதிய உயர்வுக்கு ஏதாவது வழி செய்ய முடியுமா? என்பது சம்பந்தமாக வழக்கறிஞர்களிடம் கேட்ட ஆலோசனைகள், இளநிலைப் பொறியாளர்/உதவிப் பொறியாளர் பணிவரன்முறை, பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உயர்வு கொடுப்பது, அடுத்த உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு, 2006 ஆம் ஆண்டு ஊட்டுப் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களை அடுத்த உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் சேர்ப்பது, அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி உதவிப் பொறியாளர்களை வைத்து ஒரு சிறப்புக் கூட்டம் நடத்துவது, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலைப் பொறியாளர்களை தேர்வு செய்வது, விதித்திருத்தங்கள், மத்திய அரசு அமைக்கவுள்ள ஏழாவது ஊதியக் குழு, நூற்றாண்டு விழா உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து பேசினார்.

நூற்றாண்டு விழா மலர் குறித்து விவாதிக்கப்பட்டது. மையச் சங்க பொறுப்பாளர்கள், மண்டலச் செயலாளர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

**முடிவுகள்:**

1. இளநிலைப் பொறியாளர்களின் ஊதிய உயர்வு சம்பந்தமாக சட்ட ரீதியான நடவடிக்கை தற்போதைய சூழ்நிலையில் தேவையில்லை என்பதால் வழக்கு தொடர வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது.

2. இளநிலைப் பொறியாளர்களின் தர ஊதியத்தை (Grade Pay) உயர்த்தித் தரக் கோரி ஊதியக் குறைத்தீர்க்கும் பிரிவுக்கு சங்கத்தின் சார்பாக மனு கொடுக்க வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது.

3. அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி பதவி உயர்வு பெற்ற உதவிப் பொறியாளர்களை அழைத்து 19.10.2013 அன்று ஒரு சிறப்புக் கூட்டம் மதுரையில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

# தமிழ்நாடு பொறியியல் சங்கம் (பொ.ப.து)

**சேப்பாக்கம், சென்னை - 600 005.**

## சிறப்புக் கூட்டம் அழைப்பிதழ்

**பெறுதல்**

மையச் சங்க பொறுப்பாளர்கள் மற்றும்
ஊட்டுப்பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்ற உதவிப் பொறியாளர்கள்
தமிழ்நாடு பொறியியல் சங்கம்.

**அன்பார்ந்த பொறியாளர் சகோதரர்களே! வணக்கம்!**

அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களின் பணிவரன்முறை, உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமாக விரிவாக விவாதித்து சில முடிவுகள் எடுக்க வேண்டி உள்ளதால், ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற உள்ளது. மையச் சங்கப் பொறுப்பாளர்கள், ஊட்டுப் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்ற உதவிப் பொறியாளர்கள் அனைவரும் தவறாது கலந்துக் கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

**இடம் :** **பவள விழா மாளிகை (பொறியியல் இல்லம்),**
**தமிழ்நாடு பொறியியல் சங்கம்,**
**பொதுப்பணித்துறை வளாகம்,**
**தல்லாகுளம், மதுரை - 625 002.**

**நாள் :** **19.10.2013 சனிக்கிழமை**
**காலை 10.30 மணி**

(து. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

---

**திருநெல்வேலி-தூத்துக்குடி கிளையின் புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுக்கும் காட்சி**



# இயங்கும் உலகம்

## தருமபுரி கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., தருமபுரி கிளைப் பொதுக்குழு கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள பொதுப்பணித்துறை இல்லத்தில் 30.06.2013 காலை 10.45 மணி அளவில் தமிழ்தாய் வாழ்த்துடன் துவங்கியது. கிளைத் தலைவர் பொறியாளர் பி.நடராஜன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்களை வரவேற்றார். பின்னர் கிளைத் தலைவர் பொறியாளர் பி.நடாஜன் அவர்கள் தலைமையில் உறுப்பினர்களின் ஒற்றுமை பற்றி விவரித்தார். கிளைச் சங்க நடவடிக்கைகள் குறித்து கிளைச் செயலாளர் பொறியாளர் எஸ்.ஆர்.சுப்பிரமணியம் அவர்கள் உரையாற்றினார். பின்னர் கிளையின் வரவு செலவு கணக்குகளை பொருளாளர் பொறியாளர் பி.சேகர் அவர்கள் அவைக்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார்.

மையச் சங்க நடவடிக்கைகள் குறித்து வெளியீட்டு செயலாளர் பொறியாளர் எஸ்.கண்ணன் அவர்கள் உரையாற்றினார். அப்பொழுது நமது பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் சங்க வளர்ச்சிக்காகவும், உறுப்பினர்கள் நலனுக்காகவும் அயராது பாடுபட்டு வருவதாகவும், கூடிய விரைவில் அனைத்து உறுப்பினர்களின் பிரச்சனைகளும் தீர்க்கப்படும் என்றும் கூறினார். மேலும் ஓய்வு பெற்ற பட்டயப் பொறியாளர்கள் பெருமன்ற உறுப்பினர்கள் சிலர் நமது முன்னாள் பொதுச் செயலாளர் பொறியாளர் சி.ப.சண்முகம் அவர்களையும், நமது சங்கத்திற்காக உழைத்த மூத்தப் பொறியாளர்களையும் அவமதித்து வருகிறார்கள் எனவும், சங்கத்தின் உறுப்பினர்கள் நலனுக்காக பணியாற்றி வரும் நமது பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்களுக்கும் வருங்காலத்தில் அந்த நிலை ஏற்படாமல் உறுப்பினர்கள் தெளிவாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மேற்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் டி. உதயகுமார் அவர்கள் மண்டத்தில் உள்ள கிளைகள் பற்றி விரிவாக உரையாற்றினார்கள். இக்கிளையில் இருந்து உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்ற பொறியாளர் ஓ.ஆர்.வடிவேல் அவர்களுக்கு வெளியீட்டுச் செயலாளர் பொறியாளர் எஸ்.கண்ணன் அவர்கள் பொன்னாடை போற்றி கௌரவித்தார்.

பின்னர் மையச் சங்க பொறுப்பாளர்கள் 2013-2014 கிளைத் தேர்தலை நடத்தினர். கீழ்கண்ட பொறியாளர்கள் ஏகமனதாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. பி.நடராஜன் |
| உபதலைவர் | - | பொறி. ஓ.ஆர்.வடிவேல் |
| செயலாளர் | - | பொறி. எஸ்.ஆர்.சுப்பிரமணியம் |
| இணைச் செயலாளர்-I | - | பொறி. எஸ்.கிருஷ்ணன் |
| இணைச் செயலாளர்-II | - | பொறி. ஜி.சேதுமாதவன் |
| பொருளாளர் | - | பொறி. டி.வெங்கடேசன் |

## தீர்மானங்கள்:

1. இளநிலைப் பொறியாளர் முதுநிலைப் பட்டியல் வெளியிட்டது போல் உதவிப் பொறியாளர் முதுநிலைப் பட்டியல் வெளியிட நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை இக்கிளைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

2. பிரிவுக்கு ஒரு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உருவாக்க நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

3. அரசு ஆணை எண்.1 மற்றும் 66 விதித்திருத்தம் பெற விரைவான நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

4. கிளை உறுப்பினர் திரு.சேதுமாதவன், தொழில் நுட்ப உதவியாளருக்கு பதவி உயர்வு பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறது.

5. நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள இளம் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் பணிவரன்முறை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறது.

6. ஆசிரியர்களுக்கு உள்ளது போல் பணி மாற்றல் கவுன்சிலை பெற ஆணை பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கிறது.

7. துறையில் பணியாற்றும் பொறியாளர் சொந்த தாலுக்காவில் பணிபுரிய ஆணை பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கிறது.

8. இளம் பொறியாளர்களுக்கு ஊதிய மாற்றம் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கிறது.

ஓய்வு பெற்ற பட்டயப் பொறியாளர் பெருமன்றம் (FORDET) உறுப்பினர்கள் திரு.டி.வி.கோமதிநாயகம், திரு.கே.வி.வெங்கடேசன், திரு.எஸ்.எஸ்.சாந்தாராம், திரு.கே.சீனிவாசன் ஆகிய நான்கு பேர் மீது மையச் சங்கம் எடுத்த நடவடிக்கைக்கு தருமபுரி கிளைச் சங்கம் முழு ஆதரவு அளிக்கிறது. அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை சரியானதே என தீர்மானிக்கப்படுகிறது.

---

## திருநெல்வேலி கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., திருநெல்வேலி கிளைப் பொதுக்குழுக் கூட்டமும் 2013-2014 ஆம் ஆண்டுக்கான கிளைச் சங்க தேர்தலும் 12.07.2013 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி அளவில் கிளைத் தலைவர் பொறியாளர் மு.முருகன் அவர்கள் தலைமையில் கிளைச் சங்க கட்டிடத்தில் பொறியாளர் எஸ்.இரத்தினசாமி அரங்கில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக மாநிலப் பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன், தென் மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர்.வி.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இறை வணக்கத்திற்குப் பின் உறுப்பினர்கள் அறிமுகம் செய்து கொண்டனர்.

கிளையின் செயலாளர் பொறியாளர் ப.முத்துசாமி அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி உரையாற்றினார். கிளையின் பொருளாளர் பொறியாளர் ஜி.முருகன் அவர்கள் 2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கை பொதுக்குழுவில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும் கூட்டத்தில் உறுப்பினர்கள் பொறியாளர்கள் கே.ஆதிமூலம், எம்.ஏ.ஜவகருதீன், எஸ்.எஸ்.பொறிசெழியன், மூத்தப் பொறியாளர்கள் ஆர்.வெங்கடசுப்பு, டி.வீரராஜ், ஆர்.பாலையன்நாடார், வி.கருடப்பன், பேரவையின் மாநிலத் தலைவர் பொறியாளர் எம்.ஊர்க்காவலன் ஆகியோர் விவாதங்களில் பங்கு பெற்றர்கள்.

தென் மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர்.வி.இரவிச்சந்திரன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி உரையாற்றினார்கள். பின்னர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் தமது விரிவான உரையில் மையச் சங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் இளம் பொறியாளர் ஊதிய முரண்பாடு, நூற்றாண்டு விழா பற்றியும் விரிவாக உரையாற்றினார். மேலும் உறுப்பினர்களின் பல்வேறு வினாக்களுக்கு பதிலுரை அளித்தார்கள்.

பின்னர் 2013-2014 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள் போட்டியின்றி ஒருமனமாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. பி.கண்ணன் |
| உபதலைவர் | - | பொறி. டி.ஆர்.ராஜன் |
| செயலாளர் | - | பொறி. கே.ஆதிமூலம் |
| இணைச் செயலாளர்-I | - | பொறி. எஸ்.எஸ்.பொற்செழியன் |
| இணைச் செயலாளர்-II | - | பொறி. எம்.எஸ்.முகமது ரபி |
| பொருளாளர் | - | பொறி. வி.ராமகிருஷ்ணன் |

கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானங்கள்:**

1. தமிழ்நாடு பொறியியல் சங்கம், டிப்ளமா பொறியாளர் பேரவை ஆகியவற்றின் நலன் கருதி திரு.டி.வி.கோமதிநாயகம், திரு.கே.வி.வெங்கடேசன், திரு.எஸ்.எஸ்.சாந்தாராம், திரு.கே.சீனிவாசன் ஆகிய நான்கு மூத்தப் பொறியாளர்கள் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்களில் நடைபெறும் அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொள்ள ஆறு மாத காலத்திற்கு மையச் சங்கம் தடை விதித்த நடவடிக்கைக்கு ஆதரவளித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

2. அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990க்கு மிக விரைவாக விதித் திருத்தம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ள மையச் சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

3. ஊட்டுப் பதவியிலிருந்து பதவி உயர்வு மற்றும் மாற்றம் பெற்ற இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் ஆகியோருக்கு பணிவரன்முறை மற்றும் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை இக்கிளை கேட்டுக் கொள்கிறது.

4. இளம் பொறியாளர்களுக்கு உள்ள ஊதிய முரண்பாட்டை களைய நடவடிக்கை எடுக்க மைய சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

5. பட்டய படிப்பு முடித்து பணி ஆய்வாளராக பணியாற்றி வருபவர்களை தொழில் நுட்ப உதவியாளராக மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க மைய சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

6. பணி நீக்கம் செய்யப்பட்ட தொழில் நுட்ப உதவியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கு பணியிடைக் காலம் (Break in service condemnation) செய்வதற்கு விரைவான முயற்சிகள் மேற்கொள்ள கேட்டுக் கொள்கிறது.

7. நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற கிளையின் சார்பில் முழு ஒத்துழைப்பு நல்குவது என தீர்மானிக்கப்படுகிறது.

8. பொதுப்பணித்துறையில் உள்ள அனைத்து பிரிவு அலுவலகத்திற்கும் ஒரு தொழில் நுட்ப உதவியாளர் பணியிடம் உருவாக்கி தர மையச் சங்கத்தை வேண்டி கொள்கிறது.

9. இந்தியாவில் உள்ள பொறியாளர்களுக்கான அமைப்பாக இந்திய பொறியாளர்கள் நிலையம், கல்கத்தா விளங்கி வந்துள்ளதுடன் இவ்வமைப்பு நடத்தும் பிரிவு A & B தேர்வுகள் (AMIE Sections A & B) பொறியியல் பட்ட படிப்பிற்கு சமமானது என்ற நிலையை 31.05.2013க்கு பிறகு திரும்ப பெறுவதாக மத்திய அரசின் மனித வள மேம்பாடு துறை அறிவித்துள்ளதை எதிர்த்து இந்திய பொறியாளர்கள் மையம் தொடர்ந்து உள்ள வழக்கில் இடைக்கால தடை டெல்லி உயர்நீதி மன்றம் விதித்துள்ளது. மேலும் இவ்வழக்கு வரும் 06.08.2013 அன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்து படித்த பட்டயப் பொறியாளர்கள் தங்கள் வாழ்வில் முன்னேற (AMIE Sections A & B) உதவியாக இருந்து வந்துள்ளதை தட்டிப்பறிக்கும் விதமாக (AMIE Sections A & B) பொறியியல் படிப்புக்கு சமமானது என்ற நிலையை திரும்ப பெறுவது என்ற மத்திய அரசின் மனித வள மேம்பாடுதுறை முடிவினை திரும்பப் பெற வேண்டும் என்பதுடன், தேவைப்பட்டால் அகில இந்திய மாமன்றத்துடன் இணைந்து மைய சங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

### கன்னியாகுமரி கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், கன்னியாகுமரி கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 13.07.2013 அன்று பொறியியல் சங்க கட்டிடத்தில் கிளை உபதலைவர் பொறியாளர் ஆர்.மோகனதாஸ் அவர்கள் தலைமையில் மாநிலப் பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் மற்றும் தென் மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர்.வி.ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உறுப்பினர் அறிமுகத்திற்கு பின் மாநிலப் பொதுச் செயலாளர் அவர்கள் சங்க செயல்பாடுகள் குறித்து பொருள் வாரியாக விரிவாக எடுத்துரைத்தார்கள். உறுப்பினர்களின் கேள்விகளுக்கும் பதிலுரை அளித்தார்கள். பின்னர் 2013-2014 ஆம் ஆண்டிற்கான கிளை நிர்வாகிகள் தேர்தல் பொதுச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. ப.சசிகுமார் |
| உபதலைவர் | - | பொறி. எஸ்.ரத்தினசாமி |
| செயலாளர் | - | பொறி. எம்.தாணுமூர்த்தி |
| இணைச் செயலாளர்-I | - | பொறி. ஆ.பிரேமலதா |
| இணைச் செயலாளர்-II | - | பொறி. செ.இராஜசெல்வம் |
| பொருளாளர் | - | பொறி. கே.இராதாகிருஷ்ணன் |

முடிவில் பொறியாளர் எஸ்.ரத்தினசாமி அவர்கள் நன்றியுரை நவில நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

### தீர்மானங்கள்:

1. கன்னியாகுமரி கிளையின் உறுப்பினர் பொறியாளர் திருமதி.கே.பேபிஉஷா இளநிலைப் பொறியாளர் அவர்கள் கணவர் திரு.எம்.எஸ்.ரெங்கநாதன் அவர்கள் 08.03.2013 அன்று இயற்கை எய்தினார். அன்னாருக்கு அஞ்சலி செலுத்துதல்.

2. கன்னியாகுமரி மாவட்டத்தில் கட்டிட கோட்டத்தில் மாற்றுப் பணியில் பணி ஆய்வாளர்களாக தரம்-2 ஆக பணிபுரிந்தவர்கள், தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில், பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களை மீண்டும் கன்னியாகுமரி மாவட்டத்தில் பணியமர்த்துவது சம்மந்தமாக கண்காணிப்புப் பொறியாளர் கட்டிடங்கள் வட்டம், திருநெல்வேலி அவர்களை அணுகி பெறுதல்.

3. உதவிச் செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்ற பொறியாளர்கள் பி.சசிகுமார், ஏ.மோகனதாஸ், எம்.சுதாகர், ஆர்.இராஜகோபால், திருமதி.சுதர்லின் மணிவண்ணன், குமாரசாமி ஆகியோர்களுக்கு பாராட்டு தெரிவித்தல்.

4. பணி ஆய்வாளர் தரம்-2 மற்றும் கம்பியாளர் தரம்-2ல் பொறியாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்று தர மையச் சங்கத்தை கோருதல்.

5. அரசாணை 1/1990-ற்கு விரைவில் விதித்திருத்தம் பெற்று தர மைய சங்கத்தை கோருதல்.

6. இளநிலைப் பொறியாளர்களுக்கு விரைவில் பணிவரன்முறை பெற்றுதர மையச் சங்கத்தை கோருதல்.

7. இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்களுக்கு இடையே உள்ள ஊதிய முரண்பாட்டை களைந்து, இளநிலைப் பொறியாளர்களுக்கு நியாயமான ஊதிய உயர்வு பெற்று தந்திட மையச் சங்கத்தை கோருதல்.

8. 2007ல் தினக்கூலியிலிருந்து பணி நிரந்தரம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பத்து ஆண்டுகள் பணிமுடித்த தேதியிலிருந்து ஊதிய நிர்ணயம் மற்றும் முதுநிலை பெற்றுத் தர மையச் சங்கத்தை கோருதல். (G.O.Ms.No.334, PW (W2) Department, dated 19.10.2007).

**கோவை-பொள்ளாச்சி கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், கோவை-பொள்ளாச்சி கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 21.07.2013 அன்று காலை 11.00 மணியளவில் பொறியாளர் இரா.பழனிச்சாமி இல்லத்தில் மாநில பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன், மாநில துணைத் தலைவர் பொறியாளர் எஸ்.பொன்னுசாமி, மேற்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் டி.உதயகுமார் ஆகியோர்களின் முன்னிலையில் கிளையின் துணைத் தலைவர் பொறியாளர் பி.சித்தார்த்தன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

நாட்டுப்பண்ணுடன் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் அவை அறிமுகத்துடன் இனிதே தொடங்கியது. 11.04.2013 அன்று இயற்கை எய்திய பொறியாளர் என்.சுப்ரமணியன் அவர்களுக்கு கூட்டத்தின் சார்பாக இரண்டு நிமிடம் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிளையின் பொதுக்குழுக் கூட்டத்தின் தலைவர் பொறியாளர் பி.சித்தார்த்தன் அவர்கள் கிளையின் செயல்பாட்டை எடுத்துரைத்தார். கிளையின் செயலாளர் உரையாக கிளையின் கிளைச் செயலாளர் பொறியாளர் ஆர்.பாலசுப்ரமணியன் அவர்கள் கிளையின் உறுப்பினர்கள் செயல்பாட்டையும் கட்டிட நிதி வழங்குவது குறித்தும் சிறப்பாக விளக்கினார்.

கிளை கட்டிட பொறுப்பாளர் பொறியாளர் எஸ்.ராஜன் பிரேம்குமார் அவர்கள் கிளை கட்டிடம் கட்டி முடிக்க வேண்டிய அவசியத்தையும், உறுப்பினர்களின் தாராளமாக கட்டிட நிதி வழங்க வேண்டும் என்றும் இரண்டாம் தளத்தின் கூரையை முடிக்கப்பட வேண்டியதின் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

கிளையின் பொருளாளர் பொறியாளர் கே.என்.ரஞ்சன் அவர்கள் கிளையின் வரவு செலவு காலம் 01.06.2009 முதல் 30.06.2013 வரையிலான அறிக்கையை பொதுக்குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்தும் உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தும் உறுப்பினர்களின் ஏகோபித்த ஒப்புதலையும் பெற்றார்.

மேற்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் டி.உதயகுமார் அவர்கள் கிளை செயல்பாட்டையும் மேற்கு மண்டல செயல்பாட்டையும் மற்றும் சங்கத்தின் நடவடிக்கைகளும் சிறப்பாக எடுத்துரைத்தார்.

மாநில துணைத் தலைவர் பொறியாளர் எஸ்.பொன்னுசாமி அவர்கள் மையச் சங்கத்தின் செயல்பாட்டையும் தான் சார்ந்துள்ள கோவை-பொள்ளாச்சி கிளையின் உறுப்பினர்களின் செயல்பாட்டையும் எடுத்துரைத்தார்.

மாநில பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் சங்கத்தின் செயல்பாட்டையும், நூற்றாண்டு விழா கொண்டாடுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தையும் சிறப்பாக விளக்கமாக எடுத்துரைத்தார்.

கிளை உறுப்பினர்கள் பொறியாளர்கள் டி.முரளிதரன், சிவசண்முகம், விஜயசேகர், ஜெயராமன், மோகன்ராஜ், ஜி.பெள்ளிராஜ், தியாகராஜன், ரமேஷ் மற்றும் மாணிக்கவேல் ஆகியோரின் சந்தேகங்களுக்கு பொதுச் செயலாளர் அவர்கள் சிறப்பாக விளக்கமளித்தார்.

கிளைச் சங்க தேர்தல் மாநில பொதுச் செயலாளர், மாநிலத் துணைத் தலைவர் மற்றும் மேற்கு மண்டலச் செயலாளர் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. கோவை-பொள்ளாச்சி கிளையின் 2013-14 ஆம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் போட்டியின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. ஆர்.பாலசுப்ரமணியன் |
| உபதலைவர் | - | பொறி. எஸ்.பொன்னுசாமி |
| செயலாளர் | - | பொறி. எஸ்.இராஜன் பிரேம்குமார் |
| இணைச் செயலாளர்-I | - | பொறி. ஆர்.கோபாலகிருஷ்ணன் |
| இணைச் செயலாளர்-II | - | பொறி. ஜி.பெள்ளிராஜ் |
| பொருளாளர் | - | பொறி. கே.என்.ரஞ்சன் |

புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்த பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு கிளையின் செயலாளர் பொறியாளர் எஸ்.இராஜன் பிரேம்குமார் அவர்களின் நன்றியுரைக்குப் பிறகு நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**தீர்மானங்கள்:**

1. பட்டயம் பெற்று பணி ஆய்வாளராக பணிபுரியும் பொறியாளர்களை Unskilled labour என உள்ளதை Skilled labour என மாற்ற மையச் சங்கம், தமிழக அரசை வலியுறுத்த வேண்டும் என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. பட்டயம் பெற்று பணி ஆய்வாளராக பணிபுரியும் பொறியாளர்களுக்கும் பாசன உதவியாளராக பணிபுரியும் ஊழியர்களுக்கும் உள்ள தர ஊதியம் வித்தியாசம் ரூ.100/- என உள்ளதை அதிகப்படுத்தித்தர தமிழக அரசை வலியுறுத்த வேண்டும் என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. கோவை-பொள்ளாச்சி கிளையின் சங்கத்தின் வரவு செலவு கணக்குகளை இயக்கவும், பராமரிக்கவும் கீழ்கண்ட புதிய பொறுப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்க இப்பொதுக்குழுவில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4. ஓய்வு பெற்ற பட்டயப் பொறியாளர் பெருமன்றத்தை சார்ந்த நான்கு பேர் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்களில் நுழைய 6 மாத காலத்திற்கு தடைவிதித்து மையச் சங்கம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

**ஈரோடு கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், ஈரோடு கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 20.07.2013 அன்று பொறியியல் இல்லத்தில் கிளைத் தலைவர் பொறியாளர் ஜி.குணசீலன் அவர்கள் தலைமையில் நாட்டுப் பண்ணுடன் துவங்கியது. கிளையின் இணைச் செயலாளர்-I பொறியாளர் கே.ஜெயசங்கர் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவை அறிமுகத்தை தொடர்ந்து கிளைத் தலைவர் துவக்க உரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து கிளைச் செயலாளர் பொறியாளர் ந.முருகேசன் அவர்கள் கிளைச் செயல்பாடுகளை எடுத்துரைத்தார். பின் கிளைப் பொருளாளர் கிளையின் வரவு செலவு கணக்குகளை அவை முன் வைத்து ஒப்புதல் பெற்றார். மையச் சங்க பொறுப்பாளர்களுக்கு கிளை சார்பாக பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள்.

மேற்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் டி.உதயக்குமார் அவர்கள் தனது உரையில் கிளையின் உறுப்பினர் வருகையை பாராட்டி மேலும் வலிமை சேர்க்குமாறு வலியுறுத்தி கூறினார். அதனைத் தொடர்ந்து மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் பேசுகையில் சங்கத்தின் வலிமை உறுப்பினர்களின் ஆர்வத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது எனவும், உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைத்து சங்கத்தை வலிமைப்படுத்த கேட்டுக் கொண்டார்.

மாநிலப் பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் செயல்பாடுகளையும், கோரிக்கைகளின் தற்போதைய நிலையையும், உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தும் உரையாற்றினார்.

உறுப்பினர்கள் கருத்து அடிப்படையில் திரு.குப்புசாமி அவர்கள் வரைவாளர் பதவியில் இருந்து உதவிப் பொறியாளராக பதவி பெயர் மாற்றம் பெற்றவர்களுக்கு பணிவரன்முறை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து 2013-2014 ஆம் ஆண்டிற்கான கிளைச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் மையச் சங்கப் பார்வையாளர்கள் முன்னிலையில் நடைபெற்று கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. ஜி.குணசீலன் |
| உபதலைவர் | - | பொறி. மு.சேகர் |
| செயலாளர் | - | பொறி. ந.முருகேசன் |
| இணைச் செயலாளர்-I | - | பொறி. கே.ஜெயசங்கர் |
| இணைச் செயலாளர்-II | - | பொறி. ஆர்.வெங்கடாஜலபதிமணி |
| பொருளாளர் | - | பொறி. கே.குழந்தைவேல் |

அதனைத் தொடர்ந்து புதிய பொறுப்பாளர்கள் அவை முன்னிலையில் சங்க உறுதிமொழி ஏற்று பொறுப்பேற்றார்கள்.

இப்பொதுக்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்:**

1. இளம் பொறியாளர், பணிவரன்முறை படுத்துதல் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்து மையச் சங்கத்தின் மூலம் பெற்றுத் தர கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. 2003-க்குப் பிறகும் ஊட்டுப் பதவியில் இருந்து உதவிப் பொறியாளராக பதவி உயர்வு பெற்ற உறுப்பினர்களுக்கு பணிவரன்முறை பெற்றுக் கொடுக்க மையச் சங்கத்தை கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. இளம் பொறியாளர்களின் ஊதிய முரண்பாடுகளை கலைந்து உதவிப் பொறியாளருக்கு இணையான ஊதியத்தை பெற நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.
4. தொழில் நுட்ப உதவியாளர் பதவியில் சேர்ந்து பதவி உயர்வு மூலம் இளம் பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டிடம் ஈரோடு பிரிவில் பணியாற்றி வரும், திரு.க.ஜெயசங்கர் பட்டப் படிப்பு முடித்துள்ளதால் உதவிப் பொறியாளராக பதவி மாற்றம் செய்ய அரசுக்கு கருத்துரு அனுப்ப தொடர் நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
5. FORDET உறுப்பினர்கள் நான்கு நபர்களை தமிழ்நாடு பொறியியல் சங்கம் நடத்தும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு ஆறு மாதங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று மையச் சங்கம் கொண்டு வந்த தீர்மானத்தை இக்கிளை வரவேற்கிறது.

இறுதியாக நன்றியுரை ஆற்றிய கிளைச் சங்க இணைச் செயலாளர் பொறியாளர் ஆர்.வெங்கடாஜலபதிமணி அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்த பின் நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

---

**இராமநாதபுரம் கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், இராமநாதபுரம் கிளையின் 2013-14 ஆம் ஆண்டிற்கான தேர்தல் பொதுக்குழுக் கூட்டம் 27.07.2013 சனிக்கிழமை காலை 10.31 மணியளவில் பரமக்குடியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பொறியாளர் எஸ்.கிருஷ்ணன் அவர்கள் தலைமையேற்று, இணைச் செயலாளர் பொறியாளர் ஜி.சந்திரசேகரன் அவர்கள் வரவேற்றார். கிளைச் செயலாளர் பொறியாளர் ஜி.நாகரத்தினம் அவர்கள் கிளைச் சங்க நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார். சிறப்பு அழைப்பாளராக மைய மண்டலச் செயலாளர் பொறியாளர் எம்.பஞ்சவர்ணம் அவர்கள் கலந்து கொண்டு இப்பொதுக்குழுக் கூட்டத்தை சிறப்பித்தார்.

கிளைப் பொருளாளர் பொறியாளர் வி.ரவிச்சந்திரன் அவர்கள் இக்கிளையின் வரவு செலவு குறித்து உரை ஆற்றினார். மைய மண்டலச் செயலாளர் பொறியாளர் எம்.பஞ்சவர்ணம் அவர்கள் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து நீண்டதொரு உரை ஆற்றியதுடன் சங்க உறுப்பினர்களின் கேள்விகளுக்கு உரிய பதில் அளித்துப் பேசினார். சிவகங்கை கிளை உறுப்பினர் பொறியாளர் எஸ்.சுகுமார் அவர்களின் அகால மரணத்திற்கு இரங்கல் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. கிளை உறுப்பினர்கள் பொறியாளர்கள் ஜி.ரமேஷ்குமார், பி.தமிழ்ச்செல்வம்

மற்றும் எஸ்.செல்வராஜ் ஆகியோர் தங்களது கருத்துக்களை கூறினார்கள். பின் 2013-14 ஆம் ஆண்டிற்கான கிளை நிர்வாகிகள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மைய மண்டலச் செயலாளர் அவர்கள் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். இக்கிளையின் 2013-14 ஆம் ஆண்டிற்கான பொறுப்பாளர்கள் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. எஸ்.கிருஷ்ணன் |
| உபதலைவர் | - | பொறி. கே.குருசாமி |
| செயலாளர் | - | பொறி. பி.தமிழ்ச்செல்வம் |
| இணைச் செயலாளர்-I | - | பொறி. சி.சந்திரசேகரன் |
| இணைச் செயலாளர்-II | - | பொறி. வி.இராமநாதன் |
| பொருளாளர் | - | பொறி. வி.இரவிச்சந்திரன் |

இப்பொதுக்குழு கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானங்கள்:**

1. தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்படவுள்ள இளம் பொறியாளர் தேர்வில் கலந்து கொள்ள ஒரே தகுதி டிப்ளமா சிவில் மட்டும் என்பதனை அறிவிக்க நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை இக்கிளை கேட்டுக் கொள்கிறது.

2. இளம் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்களை பணிவரன்முறைப் படுத்த விரைந்து செயல்பட மையச் சங்கத்தை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

3. பிரிவுக்கு ஒரு தொழில் நுட்ப உதவியாளரை நியமிக்க இத்துறையை வலியுறுத்துகிறது.

4. இக்கிளையில் உபரியாக உள்ள ரூ.20,000/-ஐ வைப்பு நிதியில் வைத்திட இக்கிளையின் பொறுப்பாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

பின் கிளையின் செயலாளர் பொறியாளர் பி.தமிழ்ச்செல்வம் அவர்கள் நன்றி நவில நாட்டுப் பண்ணுடன் பொதுக்குழுக் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

---

## தேனி கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தேனி கிளையின் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் கிளைச் சங்க தேர்தல் 05.07.2013 அன்று மாலை 6.30 மணியளவில் பொறியாளர் எஸ்.சந்திரசேகரன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மையச் சங்க நிதிச் செயலாளர் பொறியாளர் ஆ.நடராஜன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டவை மற்றும் தேனி கிளை சார்பாக கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. எஸ்.சந்திரசேகரன் |
| உபதலைவர் | - | பொறி. எம்.சதாசிவம் |
| செயலாளர் | - | பொறி. நா.முத்தையா |
| இணைச் செயலாளர்-I | - | பொறி. எஸ்.செந்தில்குமார் |
| இணைச் செயலாளர்-II | - | பொறி. சி.செல்வகுமார் |
| பொருளாளர் | - | பொறி. மா.சென்ராம் |

**தீர்மானங்கள்:**

1. உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் 2000 ஆம் ஆண்டு உதவிப் பொறியாளர்களுக்கு பிறகு அரசு ஆணை எண்.1ல் உள்ள உதவிப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணியில் சேர்ந்த இளம் பொறியாளர் பணிமுறிவு காலத்தினை பணிகாலமாக சேர்க்க உரிய ஆணை விரைவில் பெற்றுத் தர கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இளம் பொறியாளர் / உதவிப் பொறியாளர் (சிவில் மற்றும் மின்) பணிவரன்முறை ஆணை விரைவில் பெற்றுத் தர கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. பட்டயப் படிப்பு முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உயர்வு பெற்றுத் தர கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இளநிலைப் பொறியாளர் முதுநிலைபட்டியலை சிலர் மாற்றியமைக்க முயற்சிப்பதாக தெரியவருகிறது. எனவே தற்போது உள்ள முதுநிலைப் பட்டியலில் எவ்வித மாற்றமும் செய்யாமல் இருக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் மையச் சங்க நிதிச் செயலாளர், கிளைச் சங்க பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் உரையாடலுக்குப் பின்னர் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

---

## திருவாரூர்-நாகை கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருவாரூர்-நாகை கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 27.07.2013 அன்று திருவாரூர் பொறியாளர் மாரிமுத்து இல்லத்தில் கிளைத் தலைவர் பொறியாளர் பி.அசோகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாகிய நிதிச் செயலாளர் பொறியாளர் ஏ.நடராஜன் மற்றும் கிழக்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர்.வேதமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இப்பொதுக்குழுக் கூட்டத்தில் ஓய்வு பெற்ற பொறியாளர் வி.சுந்தரபாண்டியன் மற்றும் பொறியாளர் ஜி.நற்குணம் அவர்களுக்கு பாராட்டு மற்றும் மரியாதை செலுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாநில நிதிச் செயலாளர் பொறியாளர் ஏ.நடராஜன் மற்றும் கிழக்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர்.வேதமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் மையச் சங்க நடவடிக்கைகள் குறித்த விளக்கங்கள் மற்றும் விவாதங்கள் முடிந்தவுடன் 2013-14 ஆம் ஆண்டுக்கான கிளைச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்று கீழ்கண்ட பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. எம்.பக்கிரிசாமி |
| உபதலைவர் | - | பொறி. பி.அசோகன் |
| செயலாளர் | - | பொறி. ஏ.ஜி.ஏ.பாபுராஜ் |
| இணைச் செயலாளர்-I | - | பொறி. என்.குலோத்துங்கன் |
| இணைச் செயலாளர்-II | - | பொறி. ஆர்.ஜி.மணிவேலன் |
| பொருளாளர் | - | பொறி. கே.சிவகுமார் |

இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

## தீர்மானங்கள்:

1. சம வேலைக்கு சம ஊதியம் வழங்கி ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இக்கிளை நன்றி தெரிவிப்பதுடன், நமது கோரிக்கையான இளம் பொறியாளர் ஊதியம் 15600-5100 பெற நடவடிக்கை எடுத்திட மையச் சங்கத்தை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

2. உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு ஏதுவாக இளம் பொறியாளர் / உதவிப் பொறியாளர் பணிவரன்முறையை விரைவாக செய்திட இப்பொதுக்குழு மையச் சங்கத்தை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

3. பட்டயம் பயின்று நான்காண்டு பணிமுடித்த பணி ஆய்வாளர்கள் மற்றும் பாசன உதவியாளர்களை தொழில் நுட்ப உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றிட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டி மையச் சங்கத்தை வலியுறுத்துகிறது. மேலும் பணி ஆய்வாளர்கள் / பாசன உதவியாளர்கள் பட்டயம் பயின்றிருந்தால் நான்காண்டுகள் பணி முடித்திருப்பின் அந்தந்த கோட்டத்திலிருந்து முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு உரிய கருத்துருவை முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து எந்தவொரு சுற்றறிக்கையும் எதிர்பார்க்காமல் ஒவ்வொரு ஆண்டும் அனுப்பிட உரிய நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

4. பத்தாண்டுகள் தினக்கூலி அடிப்படையில் பணிமுடித்து பணி நிரந்தரப்பட்ட ஊழியர்கள் அனைவருக்கும் பணி நிரந்தரப்பட்ட நாள் முதல் அரசாணை வெளியிடப்பட்ட நாள் வரை ஆண்டுக்கு ஒரு ஊதிய உயர்வு வழங்கிடவும் மையச் சங்கத்தை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

இக்கூட்டத்தின் முடிவில் புதிய பொறுப்பாளர்களின் உறுதிமொழியுடன் திரு.ஜி.எஸ்.மணிவேலன் அவர்களது நன்றியுரையுடன் இனிதே நிறைவுற்றது.

---

## தஞ்சாவூர் கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தஞ்சாவூர் கிளையின் பொதுக்குழு மற்றும் கிளையின் 2013-14 ஆம் ஆண்டு பொறுப்பாளர்கள் தேர்வும் 06.07.2013 காலை 10.30 மணியளவில் "பொறியியல் இல்லம்" தஞ்சாவூரில் தலைவர் பொறியாளர் என்.வேணுகோபாலன் அவர்களின் தலைமையில் இறை வணக்கத்துடன் இனிதே துவங்கப்பட்டது. கிளையின் உறுப்பினர் பொறியாளர் ஜி.லலிதா இளம் பொறியாளர் அவர்களின் தாயார் மறைவிற்கும் உத்திரகாண்ட் மாநிலத்தில் வெள்ளப் பெருக்காள் உயிரிழந்தவர்களின் நினைவாகவும் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

உறுப்பினர்கள் அறிமுகத்திற்கு பின்னர், கிளையின் தலைவர் பொறியாளர் என்.வேணுகோபாலன் வரவேற்புரை ஆற்றினார். கிளையின் செயல்பாடுகள் குறித்து, கிளையின் செயலாளர் பொறியாளர் என்.நாகராஜன் விரிவாகப் பேசியும் மையச் சங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் உரையாற்றினார். பின்பு கிளைப் பொருளாளர் பொறியாளர் வி.சிவப்பிரகாசம் அவர்கள் 2012-13 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையை பொதுக்குழுவில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறப்பட்டது.

மையச் சங்க செயல்பாடுகள் குறித்து கிழக்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர்.வேதமூர்த்தி அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார். பின்னர், சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் மையச் சங்கத்தின் நடவடிக்கைகள் பற்றி எடுத்துத்தார். மாநில பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் மையச் சங்கத்தில் எடுக்கப்பட்ட எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்து உறுப்பினர்களின் கேள்விகளுக்கு விரிவாக விளக்கம் அளித்தார். உறுப்பினர்கள் பொறியாளர்கள் எஸ்.அய்யனார், கே.சோமசுந்தரம், என்.நாகராஜன், கே.சேகரன் (ஓய்வு), வி.சிவப்பிரகாசம் ஆகியோர்கள் தத்தமது கருத்துக்களை எடுத்துரைத்தார்கள்.

பின்னர் ஓய்வு பெற்ற பொறியாளர் ஆறுமுகம் இளம் பொறியாளர் அவர்களுக்கு பாராட்டும் பொன்னாடையும் அணிவிக்கப்பட்டது. பிறகு உதவிச் செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்ற பொறியாளர்கள் மனோகரன், அன்பரசன், என்.நாகராஜன் ஆகியோர்களுக்கு பாராட்டும் பொன்னாடையும் அணிவிக்கப்பட்டது. அதன் பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. பின்பு 2013-14 ஆம் ஆண்டிற்கான கிளைத் தேர்தல், நடைபெற்று கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. என்.வேணுகோபாலன் |
| உபதலைவர் | - | பொறி. கே.தியாகராஜன் |
| செயலாளர் | - | பொறி. என்.நாகராஜன் |
| இணைச் செயலாளர்-I | - | பொறி. ஜி.லலிதா |
| இணைச் செயலாளர்-II | - | பொறி. கே.சோமசுந்தரம் |
| பொருளாளர் | - | பொறி. வி.சிவப்பிரகாசம் |

கிளையின் துணைத் தலைவர் பொறியாளர் கே.தியாகராஜன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்:**

1. தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சை கிளையின் முதல் தளத்தில் உள்ள அறைகளை மேம்படுத்த கிளைப் பொதுக்குழு தீர்மானிக்கிறது.

2. இளம் பொறியாளர் ஊதிய முரண்பாட்டை நிவர்த்தி செய்ய அமைக்க பெற்ற ஒருநபர் கமிஷன் அறிக்கையை விரைந்து பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு இக்கிளை மையச் சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

3. பொதுப்பணித்துறையில், நீர்வள ஆதார அமைப்பில், பட்டய பொறியாளருக்கு உரிய மேற்கணிகர் (Overseer) பதவியினை பட்டயப் பொறியாளருக்கே பெற்றுத் தர நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க இப்பொதுக்குழுக் கேட்டுக் கொள்கிறது.

4. இதுநாள் வரை ஊட்டு பதவியிலிருந்து இளம் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களை பணிவரன்முறை செய்து வருகின்ற உதவிச் செயற்பொறிாயளர் பதவி உயர்வு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறு இக்கிளை மையச் சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

5. உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு 2012-13 ஆம் ஆண்டு உரியதை மட்டும் பெற நடவடிக்கை எடுக்குமாறு தஞ்சை கிளை கேட்டுக் கொள்கிறது.

6. உதவிப் பொறியாளர் முதுநிலை பட்டியல் (Seniority List) உடன் பெற்றுத் தர மைய சங்கத்தை தஞ்சை கிளை கேட்டுக் கொள்கிறது.

---

**சேலம் கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சேலம் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் 2013-14 ஆம் ஆண்டுக்கான கிளைப் பொறுப்பாளர்கள் தேர்தல் கூட்டம் 20.07.2013 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு துவங்கி சேலம் கிளையின் பொறியாளர் சி.சண்முகப்பெருமாள் அரங்கத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளைத் தலைவர் பொறியாளர் எஸ்.ஆறுமுகம் அவர்கள் தலைமையேற்றார். கூட்டத்திற்கு மையச் சங்க சிறப்பு அழைப்பாளர்களாக மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் மற்றும் மேற்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் தி.உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இறைவணக்கத்திற்கு பிறகு உறுப்பினர்கள் சுய அறிமுகம் நடைபெற்றது. கூட்டத்தில் பட்டயப் படிப்பு கல்வி தகுதியுடன் கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு பெற்று ஓய்வு பெற்ற பொறியாளர் டி.ஜானகிராமன் அவர்களின் மறைவுக்கும், முன்னாள் வெளியீட்டு செயலாளர் பொறியாளர் வி.இராமச்சந்திரன் அவர்களின் மறைவுக்கும் இரங்கல் தெரிவித்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி அனுசரிக்கப் பெற்றது. தொடர்ந்து சேலம் கிளையின் இணைச் செயலாளர் பொறியாளர் பி.கண்ணன் அவர்களது வரவேற்புரைக்கு பின்னர் கிளைத் தலைவர் பொறியாளர்

எஸ்.ஆறுமுகம் அவர்கள் தலைமையுரையாற்றினார். சங்க உறுப்பினர்கள் வருகைக்கு நன்றி கூறி கூட்டத்திற்கு உறுப்பினர்கள் அனைவரும் இனி வருங்காலத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொண்டார்.

அடுத்ததாக கிளைச் செயலாளர் பொறியாளர் இரா.வேதநாராயணன் அவர்கள் கிளையின் செயல்பாடுகள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகோள் மற்றும் இல்லக் காப்பாளர் ஒருவரை தெரிவு செய்யகோரி உரையாற்றினார். கிளையின் முன்னாள் பொருளாளர் பொறியாளர் ஆர்.பன்னீர்செல்வம் அவர்கள் கிளையின் வரவு செலவு குறித்து பேசி, வரவு செலவு அறிக்கையினை ஓரிரு நாட்களில் சமர்ப்பிப்பதாக கூறி அமர்ந்தார்.

அடுத்து மேற்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் தி.உதயகுமார் அவர்கள் தமது உரையில் மேற்கு மண்லத்தைச் சார்ந்த கிளைகளின் செயல்பாடுகள் மற்றும் கிளையின் உறுப்பினர் வருகை குறைவு குறித்து பேசி, வருங்காலங்களில் மைய சங்க செயல்பாடுகள் திறம்பட இருக்க உறுப்பினர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் மிகவும் அவசியமானது என தெரிவித்தார். மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து உரையாட தொடர்ந்து, பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் 2013-14 ஆம் ஆண்டுகள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு குறித்த தற்போது நிலை,: இளம் பொறியாளர் பணிவரன்முறை, தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் இளம் பொறியாளர் தேர்வு, உதவிப் பொறியாளர் மற்றும் இளம் பொறியாளர் திருத்திய ஊதியம் பெற சங்க நடவடிக்கைகள், பட்டயப் படிப்பு முடித்த பணி ஆய்வாளர்கள் தொழில் நுட்ப உதவியாளராக பதவி உயர்வு பெற அரசுக்கு கருத்துரு சமர்ப்பித்தல், நூற்றாண்டு விழா ஆகிய பொருள் குறித்து விரிவாக உரையாற்றினார். கூட்டத்தில் உறுப்பினர் பொறியாளர் எஸ்.எஸ்.சாந்தி அவர்கட்கு பொங்கும்நிதி சான்றிதழினை பொதுச் செயலாளர் அவர்கள் வழங்கினார். கூட்டத்தில் கலந்து கொண்ட மைய சங்க பொறுப்பாளர்கள் மற்றும் பட்டயப் படிப்பு முடித்து கண்காணிப்புப் பொறியாளராக பதவி உயர்வு பெற்று ஓய்வு பெற்ற பொறியாளர் பொ.பா.மோகன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

தொடர்ந்து 2013-14 ஆம் ஆண்டுக்கான சேலம் கிளையின் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்ய மைய சங்க அழைப்பாளர்கள் முன்னிலையில் தேர்தல் நடைபெற்றது. கீழ்கண்ட புதிய பொறுப்பாளர்கள் போட்டியின்றி ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. பி.சண்முகம் |
| உபதலைவர் | - | பொறி. எஸ்.ஆறுமுகம் |
| செயலாளர் | - | பொறி. இரா.வேதநாராயணன் |
| இணைச் செயலாளர்-I | - | பொறி. பி.சக்திவேல் |
| இணைச் செயலாளர்-II | - | பொறி. ப.கண்ணன் |
| பொருளாளர் | - | பொறி. எஸ்.பாண்டியன் |

தொடர்ந்து கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானங்கள்:**

1. மறைந்த பொறியாளர் டி.ஜானகிராமன் கண்காணிப்புப் பொறியாளர் (ஓய்வு) மற்றும் பொறியாளர் கோல்டுவின் இம்மானுவேல் ஆகியோரின் உருவப்படங்கள் இச்சங்க கூட்ட அரங்கில் திறந்து வைக்க தீர்மானிக்கப்பட்டது.

2. சேலம் கிளையின் இல்ல காப்பாளராக பொறியாளர் முருகேசன் உதவிப் பொறியாளர் அவர்கள் செயல்பட தீர்மானிக்கப்பட்டது.

3. அரசாணை என்.1 மற்றும் அரசாணை எண்.66க்கு விதித்திருத்தம் வேண்டி நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

4. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள இளம் பொறியாளர் / தொழில் நுட்ப உதவியாளராக பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணியமர்த்தப்பட்ட பொறியாளர்களின் பணியிடைக்காலம் பிழை பொறுத்தல் (Condonation of break in service) குறித்த கோப்பின் மீது விரைவில் நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய மையச் சங்கத்தை வலியுறுத்தல்.

5. இளம் பொறியாளருக்கு உதவிப் பொறியாளருக்கு இணையாக திருத்திய ஊதிய விகிதம் பெற நடவடிக்கை எடுக்க மைய சங்கத்தினை வலியுறுத்த தீர்மானிக்கப்பட்டது.

6. இளம் பொறியாளர்களின் பணிவரன்முறையின் உடனடியாக பெற்றுத் தர மைய சங்கத்தை வலியுறுத்தி தீர்மானிக்கப்பட்டது.

7. மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டத்தில் மூத்தப் பொறியாளர்கள் நான்கு பேரை தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நலன் கருதி தமிழ்நாடு பொறியியல் சங்க கட்டிடங்களில் நடைபெறும் அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொள்ள ஆறு மாதத்திற்கு தடை விதிக்கப்பட்டதற்கு இக்கிளைச் சங்கம் தனது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது.

கூட்டத்தில் மூத்தப் பொறியாளர்கள் ம.பலராமன், கிருஷ்ணமூர்த்தி, சி.இராமசாமி, சாம்பசிவம் ஆகியோர் கலந்து கொண்டனர். மூத்த உறுப்பினர் பொறியாளர் ம.பலராமன் அவர்கள் கிளையின் புதிய பொறுப்பாளர்கள் திறம்பட செயல்பட வாழ்த்துக்கள் தெரிவித்தார். கிளையின் பொருளாளர் பொறியாளர் எஸ்.பாண்டியன் அவர்கள் நன்றியுரை வழங்க நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

---

**புதுக்கோட்டை கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், புதுக்கோட்டை கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 13.07.2013 அன்று காலை 11.00 மணியளவில் புதுக்கோட்டை பொதுப்பணித்துறை வளாகத்திலுள்ள கிளைச் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. பொறியாளர் எஸ்.சித்தார்த்தன் அவர்கள் வரவேற்று பேசிய பின் கூட்டம் துவங்கியது. கிளையின் உறுப்பினர் பொறியாளர் ஏ.முகம்மது ஜலாலுதீன் அவர்களின் துணைவியாளர் சம்சுதீன அவர்களின் மறைவுக்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிளைச் சங்க நடவடிக்கைகளை கிளைச் செயலாளர் பொறியாளர் ஜி.அண்ணாமலை அவர்கள் விரிவாக எடுத்துரைத்தும் பொதுக்குழு கூட்டத்திற்கு அதிக அளவில் உறுப்பினர்கள் வருகை புரிந்ததற்கு பாராட்டு தெரிவித்தும் நூற்றாண்டு விழாவிற்கு இதுவரை நன்கொடை நிதி செலுத்திய உறுப்பினர்களுக்கு பாராட்டு தெரிவித்ததோடு மீத உறுப்பினர்கள் இந்த மாதத்திற்குள் நிதி செலுத்த வேண்டும் படி கேட்டுக் கொண்டார். கிளையின் வரவு செலவு அறிக்கையானது கிளையின் பொருளாளர் பொறியாளர் கா.வெள்ளிமலை அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு அவையின் ஒப்புதல் பெறப்பட்டது.

மைய சங்கத்தின் சார்பில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட மாநில நிதிச் செயலாளர் பொறியாளர் ஏ.நடராஜன் அவர்களும், கிழக்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர்.வேதமூர்த்தி அவர்களும் மையச் சங்க நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தனர். பொறியாளர்கள் கே.எல்.ஆரோக்கியசாமி, ஜி.அண்ணாமலை, கா.வெள்ளிமலை, எம்.கல்யாணசுந்தரம் ஆகியோர் கேட்ட சந்தேகங்களுக்கு மையச் சங்க பொறுப்பாளர்கள் விளக்கமளித்தனர். அதன் பிறகு 2013-2014 ஆம் ஆண்டிற்கான கிளை பொறுப்பாளர்கள் தேர்தல் மையச் சங்கத்தின் சார்பில் வருகை தந்த பொறியாளர் ஏ.நடராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் போட்டியின்றி ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. எம்.கல்யாணசுந்தரம் |
| உபதலைவர் | - | பொறி. எஸ்.சித்தார்த்தன் |
| செயலாளர் | - | பொறி. ஜி.அண்ணாமலை |
| இணைச் செயலாளர்-I | - | பொறி. கே.எல்.ஆரோக்கியசாமி |
| இணைச் செயலாளர்-II | - | பொறி. என்.பாஸ்கர் |
| பொருளாளர் | - | பொறி. கா.வெள்ளிமலை |

பொறியாளர் ஆர்.சந்திரசேகரன் அவர்கள் நன்றி நவில தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## கிளைச் சங்க பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்

### கன்னியாகுமரி கிளை






### தர்மபுரி கிளை





### புதுக்கோட்டை கிளை



### இராமநாதபுரம் கிளை



# மதுரையில் பொறியாளர் தினவிழா

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர்கள் சங்கம் ஆகியவைகளை இணைத்து தமிழ்நாடு டிப்ளமோ பொறியாளர்கள் பேரவை நடத்திய பொறியாளர் தின விழா 24.09.2013 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மதுரை கே.கே. நகர் மெட்ரோ போல் ஹோட்டல் A/c ஹாலில் பேரவையின் மதுரைக் கிளையின் தலைவர் பொறியாளர் எம்.மகாலிங்கம் தலைமை வகிக்க, TNEA மதுரை கிளைத் தலைவர் பொறியாளர் ஜெ.சீனிவாசன் முன்னிலை வகிக்க, பேரவை மற்றும் TNEA-வின் செயலாளர் பொறியாளர் சி.பி.மோகன்குமார் தொகுப்புரை வழங்க, மதுரை கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத் தேனீ இரா.சொக்கலிங்கம் அவர்கள் வளர்ச்சியும், முயற்சியும் என்ற தலைப்பிலும், கவிஞர் பொறியாளர் நெல்லை ஜெயந்தா அவர்கள் இலக்கிய இன்பம் என்ற தலைப்பிலும் இலக்கியப் பேருரையாற்ற பொறியாளர்களின் மிகத் திரளான கூட்டத்துடன் விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்துக்குப்பின் பேரவையின் துணைத்தலைவர் பொறியாளர் டி.இராதாகிருஷ்ணன் வரவேற்புரையாற்ற கூட்டம் துவங்கியது. தலைவர் பொறியாளர் எம்.மகாலிங்கம் தனது உரையில் உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர்களுக்கு சமவேலைக்கு சம ஊதியம் கிடைத்திருப்பதாலும் இளநிலைப் பொறியாளர்களின் ஊதியத்தை மேலும் கொஞ்சம் உயர்த்த பேரவை பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

செயலாளர் பொறியாளர் சி.பி.மோகன்குமார் அனைவரையும் பாராட்டியதோடு, வயதான காலத்திலும் பேரவைக்காக கடுமையாக உழைக்கும் பேரவை மாநில கொள்கை பரப்பு செயலாளர் பொறியாளர் இரா.ஞானபண்டிதன் அவர்களைத் தனியாகப் பாராட்டினார்.

சிறப்பு அழைப்பாளர்களுக்கு சால்வை அணிவித்த பின் வாழ்த்துரை வழங்க வந்த பேரவையின் மாநில கொள்கை பரப்பு செயலாளர் பொறியாளர் இரா.ஞானபண்டிதன் தனது உரையில் மேடையில் உள்ளவர்களைப் புகழ்ந்தும் டிப்ளமோ பொறியாளர் பாரத ரத்னா மோசகுண்டம் விஸ்வேஸ்வரய்யா 103 ஆண்டுகள் வாழ்ந்ததையும், அவரின் சிறப்புகளையும், அவரது பிறந்தநாளை நாடு முழுவதும் பொறியாளர்கள் தினமாகக் கொண்டாடிக் கொண்டிருப்பதையும், பொறியாளர் பென்னிகுக் பெரியாறு அணை கட்ட செய்த தியாகங்களையும் அதனால் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறியதையும், பல பெரியோர்கள் பிறந்த செப்டம்பர் மாதத்தின் சிறப்பினையும் எடுத்துரைத்தார். பின் இவ்விழாவை தனியொரு ஆளாக நின்று சிறப்பாக நடத்திட பெருந்தொகை கொடுத்த பெருந்தகை பொறியாளர் சி.பி.மோகன்குமார் அவர்களுக்கு தமிழ்நாடு டிப்ளமோ பொறியாளர்கள் பேரவையின் மாநில சங்கம் சார்பில் அதன் தலைவர் பொறியாளர் எம்.ஊர்க்காவலன், மாநில கொள்கை பரப்புச் செயலாளர் பொறியாளர் இரா.ஞானபண்டிதன் இருவரும் சேர்ந்து சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தமிழ்நாடு ஓவர்சியர்கள் சங்கத்தின் மதுரை மாவட்ட தலைவர் பொறியாளர் கிருபாகரன், ஓவர்சியர்கள் ஊதியத்தை ரூ.9300+4200/-ஆக பெற்றுத் தந்த பேரவைக்கு தமிழ்நாட்டில் உள்ள ஓவர்சியர்கள் அனைவரும் என்றென்றும் கடன்பட்டுள்ளோம் எனக் கூறினார்.

பின் TNEA மைய மண்டலச் செயலாளர் பொறியாளர் எஸ்.லீலாவதி, ஊரக வளர்ச்சித்துறை மாநிலச் செயலாளர் பொறியாளர் ஆர்.பரமானந்தம், பொதுப்பணித்துறை வரைவாளர் சங்க முன்னாள் தலைவர் ஜெயச்சந்திரன், TNEB செயற்பொறியாளர் பொறியாளர் எம்.சண்முகம் மற்றும் வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் பொறியாளர் பீட்டர் ஆரோக்கியசாமி ஆகியோர் இம்மாதிரியான கூட்டங்களில் கலந்து கொண்டு நமது உறவைப் பலப்படுத்துவது மகிழ்ச்சியாக உள்ளது என்றும், கூட்டத்தின் சிறப்பு பற்றியும், இதுபோல் கூட்டம் வருடந்தோறும் நடைபெற வேண்டும் என வாழ்த்திப் பேசினார்கள்.

பின் சிறப்புரையாற்ற வந்த இந்தியன் ரயில்வேயின் செயற்பொறியாளர் பொறியாளர் பி.வில்லியம் ஜாய் தான் 4ம் வகுப்பு படித்தபோது கற்ற கவிதையை நினைவு கூர்ந்து விழா சிறக்க வாழ்த்தினார். வேளாண்மைப் பொறியாளர்கள் சங்க மாநிலத் தலைவர் பொறியாளர் எஸ்.பெரியசாமி தனது உரையில், விழா நடத்துவோரையும், இலக்கியப் பேருரையாற்ற வந்தவர்களையும் வாழ்த்தியும், மதுரை மாநகராட்சி பொறியியல்துறை முன்னைப்போல் சிறப்பாக இல்லை. அதை முன்னாள் தலைமைப் பொறியாளர் பொறியாளர் கே.சக்திவேலுக்கு முன் சக்திவேலுக்கு பின் என (கி.மு.-கி.பி போல்) பிரிக்கலாம் என்று புகழ்ந்துரைத்தார். TNEA மற்றும் DECT-ஐப் பலப்படுத்த ஓய்வு பெற்ற பொறியாளர்கள் REAT-ல் சேர வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ்நாடு டிப்ளமோ பொறியாளர்கள் சங்க மாநிலத் தலைவர் பொறியாளர் எம்.ஊர்காவலன் உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளருக்கும் சமவேலைக்கு சம ஊதியம் என்ற நமது கொள்கை நிறைவேறிவிட்டது என்றும், அதனால் யாரும் வருத்தப்படத் தேவையில்லை என்றும் தெற்காசிய டிப்ளமோ (SAARC) பொறியாளர்கள் சங்கக் கூட்டத்தில் தான் கலந்து கொண்டது பற்றியும், வங்க தேசத்தை தலைமையிடமாகக் கொண்டு தெற்காசிய டிப்ளமோ பொறியாளர்கள் கூட்டமைப்பு நடைபெறுகிறது என்றும், அவர்கள் 5 லட்சம் டிப்ளமோ பொறியாளர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து சங்கத்திற்கு 26 மாடிக் கட்டிடத்தை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதில் 4 மாடிகளை SAARC அமைப்பிற்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்றும், இளைய தலைமுறையைச் சேர்ந்த பணியில் உள்ள பொறியாளர்கள் பேரவையின் மாநில தலைமையை ஏற்று அகில இந்திய டிப்ளமோ பொறியாளர்கள் மாமன்றக் கூட்டங்களில் கலந்து, SAARC அமைப்பிற்கும் சென்று டிப்ளமோ பொறியாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுகோள் விடுத்தார்.

முன்னாள் தலைமைப் பொறியாளரும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் எஸ்டேட் ஆபீசருமாகிய பொறியாளர் கே.சக்திவேல் அவர்கள் தனது உரையில் ஆதாம் ஏவாள் கதையை மேற்கோள் காட்டி, கடவுள் சாப்பிடாமல் தவிர்க்கச் சொல்லிய குறிப்பிட்ட பழத்தை ஆதாமும் ஏவாளும் சாத்தானின் பேச்சைக் கேட்டு சாப்பிட்டதால்தான் மனிதனுக்கு சாத்தான் குணம் வந்துவிட்டது என்றும், அதை சங்கத்தை பிளவுபடுத்த சிலர் உபயோகித்து சங்கங்களின் ஒற்றுமையை சிதைக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

பின் இலக்கிய உரையாற்ற வந்த கவிஞர் பொறியாளர் நெல்லை ஜெயந்தா அவர்கள் திரு.சொக்கலிங்கம் பொறியாளர் சி.பி.மோகன்குமார் அவர்களைப் புகழ்ந்துரைத்ததோடு, மறைந்த கவிஞர் வாலியுடன் பழகிய நாட்களை நினைவு கூர்ந்தார். உழைப்பும் உணர்வும் தான் வெற்றிதரும் என்பதை விளக்கத்துடன் எடுத்துரைத்து, பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது பொதுப்பணித்துறை அமைச்சர் சாதிக் பாட்சாவுடன் காரில் பயணம் செய்த போது, பாலம் கட்டிக் கொண்டு டிராபிக்ஜாம் ஏற்படுத்திய நெடுஞ்சாலைத்துறைப் பொறியாளர்களை கடுஞ்சொல்லால் கோபித்துக் கொண்ட பொதுப்பணித்துறை அமைச்சரிடம் புன்முறுவல் பூத்த முகத்துடன் அண்ணா அவர்கள் பொறியாளர்கள் நினைத்தால் அமைச்சர், முதலமைச்சர்களாகலாம், ஆனால் அரசியல்வாதிகளாகிய நாம் நினைத்தால் பொறியாளர்கள் ஆக முடியாது என்ற கூறியதை நினைவுகூர்ந்து பொறியாளர்களின் பெருமைகளை உயர்த்திப் பேசினார்.

தலைமைப் பேச்சாளர் மனிதத்தேனீ இரா.சொக்கலிங்கம் தனது உரையில், பொறியாளர்கள் கூட்டத்தில் சம்பந்தமில்லாத தன்னை அழைத்து கௌரவப்படுத்தியதற்கு நன்றி தெரிவித்தார். கண்ணதாசன் கூறிய உவமைகளை எடுத்துக் கூறியதோடு விடாமுயற்சி தான் வெற்றி தரும் என்பதற்கு படிக்காத பல அறிஞர்களை மேற்கோள் காட்டி, அனைவரும் மகிழ நகைச்சுவையுடன் எடுத்துரைத்தார். விழா ஏற்பாடுகளை TNEA மதுரைக்கிளைப் பொருளாளர் பொறியாளர் ஆர்.குருசாமி,பொறியாளர் கே.அழகேசன், பொறியாளர் ஜி.அய்யப்பன், பொறியாளர் பாலமுருகன் ஆகியோர் சிறப்புறச் செய்து உதவினர். DECT மற்றும் TNEA மதுரைக்கிளை செயலாளர் பொறியாளர் சி.பி.மோகன்குமார் அவர்கள் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதாக முடிவுற்றது.

# தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர்கள் சங்கம் (REAT) மதுரைக் கிளை துவக்க விழா

தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர்கள் சங்கம் மதுரைக் கிளையின் துவக்க விழா 21.09.2013 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு மதுரை தல்லாகுளம் பொதுப்பணித்துறை வளாகம், தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொதுப்பணித்துறை பவளவிழா மாளிகையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது.

உறுப்பினர்கள் அறிமுகத்திற்குப் பின் தமிழ்நாடு வேளாண்மைப் பொறியாளர்கள் சங்கம் மதுரையைச் சேர்ந்த பொறியாளர் இராசரத்தினம், தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொ.ப.து. முன்னாள் தென் மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர்.ஜெயராஜ் ஆகியோரின் மறைவிற்கு இரண்டு மணித்துளிகள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் REAT மதுரைக் கிளையின் அமைப்பாளரும், பேரவையின் மாநில கொள்கை பரப்புச் செயலாளருமான பொறியாளர் இரா.ஞானபண்டிதன் அவர்கள் ஏன் இந்தப் புதிய சங்கமான REAT வேண்டும் என நயம்பட அவைக்கு விளக்கினார். உறுப்பினர்களின் கேள்விகளுக்கு சரியான விளக்கங்களை வழங்கினார். குறிப்பாக FORDET பொதுக்குழுவில் கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றிய பின் பெற்ற தாயாகிய 100 ஆண்டுகளைக் கடந்த தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு இளைய புதல்வர்கள் விழா எடுக்கும் போது TNEA-ன் மூத்த புதல்வர்களாகிய மூத்த பொறியாளர்கள் நூற்றாண்டு விழாவில் உற்சாகத்துடன் கலந்து கொள்வதை விடுத்து (Rights) உரிமையை விட்டுக் கொடுத்து விட்டு மெஸ்மரிசத்திற்கு கட்டுப்பட்டதைப் போல ஏன் தொடர்ந்து FORDET-ல் இருக்கிறார்கள் எனப் புரியவில்லை எனத் தனது வருத்தத்தைப் பதிவு செய்தார்.

**FORDET போட்ட தீர்மானங்களின் சுருக்கம்:**

1. தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொ.ப.து. நடத்தவிருக்கும் நூற்றாண்டு விழாவில் FORDET-ஐ சேர்ந்த உறுப்பினர்கள் யாரும் கலந்து கொள்ளக்கூடாது.
2. நூற்றாண்டு விழாவிற்கு FORDET-ஆல் வசூல் செய்யப்பட்ட பணத்தை தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு வழங்க தேவையில்லை. (பணத்தை திரும்பப் பெற விரும்பும் உறுப்பினர்கள் படிவத்தை பூர்த்தி செய்து பெற்று கொள்ளலாம் என்று திருத்தம் வேறு)
3. பேரவை (DECT)-ல் இருந்து இணைப்பை விலக்கி கொள்வது (Deaffiliation).

மேலும் தமிழ்நாடு பொறியியல் சங்க கட்டிடங்கள் அனைத்தும் அரசு கட்டிடம் என "நா"கூசாமல் பேசுவது போன்ற TNEA-விற்கு எதிரான செயல்களை ஏற்றுக் கொண்டு தாய்ச் சங்கமாகிய TNEA-ன் மேல் பற்றுக் கொண்ட பொறியாளர்கள் FORDET-ல் ஏன் தொடர்ந்து இருக்கிறார்கள் என்றும் நூற்றாண்டு விழா நேரத்தில் TNEA-க்கு உதவாமல், வளர்ச்சியை கெடுத்து FORDET-ல் இருந்து கொண்டு வயதான இவர்கள் என்ன சாதிக்க போகிறார்கள் என்பதும் புரியவில்லை எனக் குறிப்பிட்டதோடு என் போன்ற நடுநிலையாளர்கள் சமாதான முயற்சிக்கு தயார் எனக் கூறியது எடுபடவில்லை, எனவும் கூறி வருத்தப்பட்டார்.

ஒரு சிலரின் வறட்டு பிடிவாதத்தால் விஷயங்களை திரித்துக் கூறி FORDET கூட்டங்களை TNEA கட்டிடத்தில் நடத்தாமல், வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருடத்திற்கு சுமார் ரூ.1 1/2 லட்சம் வரை ஓய்வுதியர்களாகிய உறுப்பினர்களின் பணம் வீணடிக்கப்படுகிறது என்பதை நடுநிலையாளர்கள் சிந்திக்க வேண்டும் என்றார்.

பேரவையின் மாநிலத் தலைவரும், REAT-ன் பொதுச் செயலாளருமாகிய பொறியாளர் எம்.ஊர்க்காவலன் அவர்கள் DECT-ன் செயல்பாடுகள் பற்றியும், REAT என்ற புதிய அமைப்பு ஏன் தேவை என்பதைப் பற்றியும் FORDET-ல் மேல் மட்டத்தில் உள்ளவர்களால் ஏற்பட்ட பிரச்சனைகள் அதைக் களைவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

தவறு செய்த நான்கு பேர் மீது TNEA நடவடிக்கை எடுத்ததால், நமது தாய் சங்கமாகிய தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு விழாவின் சிறப்பை கெடுக்கும் நோக்கத்தோடு FORDET உறுப்பினர்கள் அதில் கலந்துக் கொள்ள் கூடாது, வசூல் செய்த பணத்தை அச்சங்கத்திற்கு கொடுக்க கூடாது, பேரவையில் இருந்து இணைப்பைத் துண்டித்துக் கொள்வது என்பது போன்ற எதிரான நடவடிக்கைகள் எல்லாம் பெற்ற தாய்க்கும், தந்தைக்கும் செய்யும் துரோகச் செயலாகும் என எடுத்துரைத்தார். தமிழ்நாடு பொறியியல் சங்கத்தில் உறுப்பினராக இணைத்துக் கொண்ட மற்றும் பயணடைந்து படிப்பால் பதவியால் வாழ்க்கையில் முன்னேறிய எந்த பொறியாளனும், இந்த துரோகச் செயலை ஏற்றுக் கொள்ள மாட்டான் எனவும், துரோகம் செய்ய துண்டிய FORDET சங்கத்தில் தொடர்ந்து உறுப்பினராக இருக்க மாட்டான் எனவும் எடுத்துரைத்தார்.

எனவே TNEA மற்றும் DECT-ன் பால் உண்மையான ஈடுபாடு கொண்ட, டிப்ளமாப் பொறியாளர்கள் மீது அன்பு பாசம் கொண்ட மூத்தப் பொறியாளர்கள் எல்லாம் ஒன்றிணைந்து தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர்கள் சங்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது எனவும், அதில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து TNEA நடத்த விருக்கின்ற நூற்றாண்டு விழாவில் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என அனைவரையும் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியாளர்கள் சங்கம் மாநிலத் தலைவர் பொறியாளர் எஸ்.பெரியசாமி அவர்கள் நூற்றாண்டைக் கடந்த தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொ.ப.து. அனைத்து துறைச் சங்கங்களுக்கும் ஒரு தாய்ச் சங்கமாகும் எனவும், அச்சங்கத்தின் தூண்களில் முக்கிய தூணாக விளங்கியவர் தியாகச் செம்மல் பொறியாளர் சி.ப.சண்முகம் அவர்கள், சங்கத்திற்காக ஆற்றிய அரும்பணியைப் பற்றி விலாவாரியாக அவைக்கு எடுத்துரைத்தார். TNEA வாங்கிக் கொடுத்த பி.இ. பட்டத்தால் தான் நான் இன்று எம்.பி.ஏ. முடித்ததோடு உதவிச் செயற்பொறியாளர் என்று பெருமையாக வலம் வருகின்றேன் என்றும், தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு எதிராக செயல்படுகின்ற சில துரோகிகள் சீக்கிரமே அழிந்து போவார்கள் என அவரது கோபக்கனலை வீசினார். இயக்க வரலாற்றில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கும், பேரவைக்கும் எதிராக செயல்பட்ட FORDET-ல் உள்ள ஒரு சிலர் கரும்புள்ளிகள் என எடுத்துரைத்தார். நியாயமான உணர்வுள்ள பொறியாளர்களை எல்லாம் REAT மூலம் ஒன்றிணைத்து TNEA-வின் நூற்றாண்டு விழாவை சீறும் சிறப்புமாக நடத்த அனைவரும் ஒத்துழைப்போம் எனவும் DECT-ஐ வலுப்படுத்துவோம் எனவும் சூளுரைத்ததோடு தங்களது சங்கமும், மூத்த பொறியாளர்களும் முழுஒத்துழைப்பு நல்குவார்கள் என எடுத்துரைத்தார்.

''பொறியியல் ஓசை'' முதல் இதழை பொறியாளர் இரா.ஞானபண்டிதன் அவர்கள் வெளியிட பொறியாளர் எஸ்.பெரியசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அடுத்து பொறியாளர்கள் எம்.கல்யாணசுந்தரம், ஆர்.முனியாண்டி, ஜி.நவநீதன், வி.வைரமுத்து, எஸ்.இராஜாராம், டி.ஆர்.கிருஷ்ணாராவ் ஆகியோர் இச்சங்கத்தின் அவசியம் பற்றி அவர்களது கருத்துக்களை பதிவு செய்தார்கள்.

அடுத்து புதிதாக உதயமாகியுள்ள REAT மதுரைக் கிளையின் பொறுப்பாளர்களைத் தேர்வு செய்யும் பணியினை மதுரை மண்டல அமைப்பாளர் பொறியாளர் இரா.ஞானபண்டிதன் அவர்களின் உதவியுடன் REAT பொதுச் செயலாளர் பொறியாளர் எம்.ஊர்க்காவலன் அவர்கள் மேற்கொண்டார். அப்போது கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் தற்சமயம் Adhoc Committee அமைத்து அதிக உறுப்பினர்களைச் சேர்த்த பின் பொறுப்பாளர்கள் தேர்வு நடத்தலாமென ஆலோசனை வழங்கினார்கள். அதன் பேரில் தற்காலிகப் பொறுப்பாளர்களாக கீழ்க்கண்ட பொறியாளர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. பொறி. ஆர்.இரத்தினம், வேளாண்மை பொறியியல் துறை (9486733741)
2. பொறி. ஏ.சுப்பையா, பொ.ப.து. (9865204101)
3. பொறி. டி.சாமுவேல்ராஜ், பொ.ப.து. (9944101130)
4. பொறி. ஜி.நவநீதன், வேளாண்மை பொறியியல் துறை (9894596628)
5. பொறி. என்.கோவிந்தராஜன், பொ.ப.து. (9442523817)

மேற்கண்டவர்கள் பொறுப்பேற்ற பின் நன்றி கூற நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிது முடிந்தது.

**- தொகுப்பு: பொறி.இரா.ஞானபண்டிதன்.**

## நன்றி



பொறியாளர் எஸ்.முருகானந்தம் கல்விப் பரிசு திட்டத்தில் (12 ஆம் வகுப்பு) முதல் பரிசு பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) தான் கொடுப்பதாக தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர், முன்னாள் சட்டச் செயலாளர் பொறியாளர் **என்.வெங்கட்ராமன்** அவர்கள் அறிவித்தார்கள். அன்னாருக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

**இந்த மாதம் பொறியியல் கதிரில் தவிர்க்க முடியாத காரணங்களினால் இயக்க வரலாறு பாகம்-2 வெளியிட இயலவில்லை. அடுத்த மாதப் பொறியியல் கதிரில் வெளியிடப்படும்.**

**- வெளியீட்டுச் செயலாளர்.**

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் தென் மண்டலச் செயலாளர் பொறியாளர் R.ஜெயராஜ் அவர்கள் 05.09.2013 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், கன்னியாகுமரி கிளையின் உறுப்பினர் பொறியாளர் T.தர்மராஜ் உதவிச் செயற்பொறியாளர் அவர்களின் தாயார் திருமதி M.ஞானசெல்வம் அவர்கள் 10.09.2013 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## மதுரையில் நடைபெற்ற பொறியாளர் தின நிகழ்வுகள்






## மதுரையில் நடைபெற்ற பொறியாளர் தின நிகழ்வுகள்






Under Postal Regd No. TN/CH/(C)/358/12-14 & TN/PMG (CCR) WPP No.308/2012-14 OCTOBER 2013
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

# சிறப்புக் கூட்டங்கள்

**இடம் :** பவள விழா மாளிகை (பொறியியல் இல்லம்),
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
பொதுப்பணித்துறை வளாகம்,
தல்லாகுளம், மதுரை - 625 002.

| | |
|---|---|
| 18.10.2013 மாலை 6.00 மணி | இளநிலைப் பொறியாளர்கள் |
| 19.10.2013 காலை 10.30 மணி | அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி பதவி உயர்வு பெற்ற உதவிப் பொறியாளர்கள் |

இளநிலைப் பொறியாளர்களின் ஊதியம் குறித்த தற்போதைய நிலை மற்றும் உதவிப் பொறியாளர்களின் பணிவரன்முறை, பதவி உயர்வு குறித்து மையச் சங்க பொறுப்பாளர்கள் உரையாற்றுகிறார்கள். பொறியாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

**- தமிழ்நாடு பொறியியல் சங்கம்.**

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி: பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர் :
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை – 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Published on 7.10.2013
Posting on 9.10.2013
REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY: **Er. D. MURUGESAN,** D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: **Er. S. KANNAN,** D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. **K.P.THIYAGARAJAN** AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5 PHONE 2854 8223